**நலன்புரிகள் நலன்கள் சபை - 2022**
---------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

நலன்புரிகள் நலன்கள் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான் விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன..

சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ்கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின ˙ தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம்செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 256,799 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 265,521 ஆக காணப்பட்டது. அத்ன பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 522,320 தொகையான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இம் வளர்ச்சிற்கு முக்கியமாக அரசாங்க உதவிகள் அதிகரித்தமை மற்றும் ஆளணி வேதனங்கள் குறைவடைந்தமை காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய போதும், 2022 ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை 2023 பெப்ரவரி 28 திகதியளவிலும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2023 பெப்ரவரி 28 திகதியளவிலும் 2022 ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க முடியாது போனதாகவும் எதிர்காலத்தில் அதனை சரிசெய்து கொள்ள குறித்துக் கொண்டதாகவும் அறிவிக்கிறேன். | கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடடிவக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டளவில் நலன்புரிகள் நலன்கள் சபையை இஸ்தாபித்து 06 ஆண்டுகள் கடந்துள்ள போதும் அதன் பிரதான பணியான, சமூக பாதுகாப்பு வலையமைப்பு கருத்திட்டம் (SSNP) மற்றும் அதன் விளைவொன்றான இணைந்த நலன்புரி முகாமைத்துவம் செய்தலும், தகவல் தொழிநுட்ப கொள்கை தயாரித்தலும் நலன்புரி நலன்களை செலுத்துவதற்காக நலன்பெறுனரை இனங்காணல் மற்றும் அதற்காக பொதுவான பிரமாணங்கள் மற்றும் சுட்டிகளை தயாரித்தலும் சிறந்த நிபுணத்துவங்களுடன் மிக்க ஆளணியொன்றை ஆட்சேர்த்தல் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானத்துடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபையை இஸ்தாபித்த நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நலன்புரிகள் நலன்கள் சபையின் பிரதான நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் இல்ஙகையில் வறுமையை ஒழிக்க இணைந்த நலன்புரி முகாமைத்துவ தொகுதியொன்றை தயாரித்தலும், நலன்வுரி நலன்களை செலுத்துவதற்கு பொருத்தமான நபர்களை தெரிவு செய்து நலன்களை செலுத்துவதுமாகும். எனினும் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் அந் நோக்கங்களை அடைந்து கொள்ள தேவையான நிகழ்சித் திட்டம் மற்றும் தொகுதியை செயற்படுத்தியிருக்கவில்லை. | 2022 ஆண்டு ஆரம்பம் முதலே நலன்புரிகள் நலன்கள் சபையிற்கு ஆணையாளர் ஒருவர் மற்றும் பணிப்பாளர் சபை இருக்காததுடன் 2022 ஜுலை மாதத்தில் ஆணையாளர் ஒருவர் மற்றும் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட பின்னர் நலன்வுரி நலன்களை செலுத்துவதற்கு பொருத்தமான நபர்களை தெரிவு செய்ய தேவையான வேலைத் திட்டத்தை தயாரித்ததாகவும் இச் செயற்பாட்டிற்கு தேவையான சட்டத்தை அங்கீகரித்துக் கொள்ளல் அதன் பின்னர் இடம்பெற்றது. அடுத்த கட்டமாக நலக்ளை பெற்றுக் கொள்வதற்காக பொது மக்களிடமிருந்து விண்ணபங்களை கோரல் இடம்பெற்றதுடன் இரண்டு சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பங்களை கையேற்கும் கால எல்லை நீடிக்கப்பட்டது. | சபைக்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேலும் இது மொத்தமான கணனித் தொகுதியொன்றினூடாக செயற்படும் செயன்முறையாகையால் அதற்காக அலுவலர்களுக்கு தேவையான பயிற்சியை வழங்க நேரிட்டதாலும், சில அரச அலுவலர்கள் இந்த நிகழ்சித் திட்டத்திற்கு உதவி செய்யாது விலகிச் சென்றதாலும் இந்த நிகழ்சித் திட்டத்தை உரிய கால எல்லையினுள் செயற்படுத்த முடியாது போனதாகவும் தற்போது இந் நிகழ்சித் திட்டதிதை வெற்றிகரமாக செயற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு பிகாரம் நலன்புரி நலன்கள் சபை, தலைவரினால் மற்றும் அமைச்சரினால் நியமிக்கப்படும் 4 அங்கத்தவர்களை உள்ளடக்க வேண்டிய போதும் 2022 சனவரி முதல் ஜுலை மாதம் வரை தலைவரொருவர் மற்றும் சனவரி முதல் ஒக்டோபர் வரை இரண்டு அங்கத்தவர்கள் இன்றி செயற்பட்டிருந்தது. | நலன்புரி நலன்கள் சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்கள் 2023 ஜுலை மாதமும் இன்னும் இரண்டு அங்கத்தவர்கள் செப்டம்பர் மாதமும் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று காணப்பட்ட ஆளணி தகவல்களின் பிரகாரம் அங்கீகார பதவி எண்ணிக்கை 17 ஆனதுடன் அவற்றில் 03 பதவிகளில், 05 வெற்றிடங்கள் மற்றும் 01 பதவியில் ஓர் மிகையும் காணப்பட்டது. | 2018.07.16 திகதி முதல் 02 பிரதி ஆணையாளர் பதவிகளை கீழ்படுத்தி மேலதிக ஆணையாளர் பதவி மற்றும் உதவி ஆணையாளர் பதவி 01 வீதம் உருவாக்கப்பட்டுள்ளது. | சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையானவாறு மற்றும் ஆளணி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |